# கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

## சட்ட பீடம்

## சட்டமாணி (மீள்) தேர்வு, ஆண்டு – I - ~~2020~~ 2019

# அரசியலமைப்புச் சட்டம் - I

(மூன்று மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை : 07

எவையேனும் **நான்கு (04)** வினாக்களுக்கு **மட்டும்** விடை தருக

(தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)

---

1. நவீன அரசியலமைப்புக்களின் நெறிமுறைத் தன்மையானது, சாராம்சத்திலும் நடபடிமுறையிலும் அரசியலமைப்புயர்வாதக் கோட்பாட்டுக்கு அவை ஒழுகியமையும் அளவை வைத்தே பரீட்சிக்கப்பட வேண்டும்.

   நீர் உடன்படுகின்றீரா? உமது தெரிவிலான இரு நியாயாதிக்கங்களிலிருந்து பெறும் உதாரணங்களை ஆதாரங்காட்டி உமது விடைக்கான காரணங்களைத் தருக.

   (25 புள்ளிகள்)

2. 'சட்டவாட்சி' என்பதன் பொதுவான புரிதலானது, அரசாங்கம் சட்டத்திற்கு உட்பட்டது என்பதும் ஆட்சியாளர் அச்சட்டத்துக்கு மேற்பட்டவரில்லை என்பதுமாகும். எவ்வாறெனினும், 'சட்டம்' என்பதனால் கருதப்படுவது யாதென்பது சட்டஞ்சாராத நம்பிக்கைவழிக் கோட்பாடுகளையும் உதவிக்கழைத்து பொருளமைவு செய்யப்படக் கூடியதாக உள்ளது.

   சட்டவாட்சிக் கோட்பாடானது காலப்போக்கில் எவ்வாறான பரிணாம வளர்ச்சியடைந்து வந்துள்ளது என்பதைச் சட்ட வல்லுநர்களினாலும், நீதித்துறையினாலும் செய்யப்பட்ட பங்களிப்பின் பின்னணியில் ஆராய்க. உமது தெரிவிலான எவையேனும் இரு நியாயாதிக்கங்களின் நீதித்துறையினை நீர் தெரிவு செய்யலாம்.

   (25 புள்ளிகள்)

3. ஜனநாயக அரசொன்றில், அரசாங்க அதிகாரத்தின் நிலைத்திருப்பானது மக்களின் விருப்பின் மீதே தங்கியுள்ளது. அதிகாரப்பரவலாக்க கோட்பாட்டின் ஏற்பிசைவின் ஊடாகவே மக்களின் இறைமையானது அரசியலமைப்பொன்றில் பேணிப்பாதுகாக்கப்படுகின்றது. இலங்கையின் இரண்டாவது குடியரசு அரசியலமைப்பானது இக்கோட்பாட்டுடன் முரண்படும் பல்வேறு

ஏற்பாடுகளைக் கொண்டுள்ளதுடன் அதன் விளைவாக மக்களின் இறைமையினையும் மலினப்படுத்துகின்றது எனலாம்.

மேலுள்ள கூற்றின் வலிதுடைமை தொடர்பில் அரசியலமைப்பின் ஏற்பாடுகளிலும் மற்றும் தீர்ப்புச் சட்ட அதிகார ஆதாரங்களிலிருந்தும் உதாரணங்கள் தந்து கருத்துரைக்க.

(25 புள்ளிகள்)

4. சுதந்திரத்திற்குப் பின்னரான அரசியலமைப்புக்களில், பாராளுமன்ற மீயுயர்தன்மைக் கருத்தேற்பினை தொடர்ந்து வைத்திருப்பதற்கு, காலனித்துவ பாரம்பரியங்களே இலங்கை மீது செல்வாக்குச் செலுத்தின எனலாம். எவ்வாறெனினும், “சோல்பரி” அரசியலமைப்பு மற்றும் முதலாவது குடியரசு அரசியலமைப்பு ஆகியவற்றுடன் ஒப்பிடும் போது, 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பானது அரசியலமைப்பு மீயுயர்தன்மையின் சாரத்தினைப் பகுதியளவில் உள்ளடக்கியுள்ளதாகத் தோன்றுகின்றது எனலாம்.

   நீர் உடன்படுகின்றீரா? உமது விடையினைப் பொருத்தமான அதிகார ஆதாரங்களுடன் தொடர்புபடுத்தி வலுப்படுத்துக.

(25 புள்ளிகள்)

5. சரத் என்பவன் சிலோனிகாவிலுள்ள ஒர் அரச கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த பொறியியலாளன் ஒருவனாவான். கடந்த வருடம் அக்கூட்டுத்தாபனத்தின் தொழிலாளர்களினால் அமைக்கப்பட்ட தொழிற் சங்கத்திற்கு தலைவனாக அவன் தெரிந்தெடுக்கப்பட்டான். இரண்டு வாரங்களுக்கு முன்னர், கூட்டுத்தாபனத்தின் சுகாதார மற்றும் பாதுகாப்பு நடைமுறைகளை மேம்படுத்துவதற்காக, ‘கொவிட் 19 பெருந்தொற்றுநோய்க்கு மத்தியில் தொழிலாளர்களின் நல்வாழ்வு’ என்பது தொடர்பில் சரத் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர்களுடன் கலந்துரையாடத் தீர்மானித்தான். கடந்த வாரம், அத்தொழிற் சங்க தலைவர் என்னும் தனது தகைமையில் பணிப்பாளர்களுடனான சந்திப்பு ஒன்றுக்கு நேர ஒதுக்கங்கோரி அவன் உத்தியோகபூர்வ கோரிக்கை ஒன்றை அனுப்பினான். குறித்த அத்தொழிற்சங்கத்தினையோ அல்லது அவ்வாறு அழைக்கப்படுவதான தொழிற்சங்கத்திலான சரத்தினுடைய தலைமைத்துவத்தினையோ பணிப்பாளர் சபை அங்கீகரிக்கவில்லை எனக்கூறி அவனது வேண்டுகோளினை அது நிராகரித்தது. இதற்கான காரணம் பணிப்பாளர்களில் ஒருவரது அரசியற் செல்வாக்கின் பிரயோகமே என்பதை சரத் கண்டறிந்தான். தொழிற் சங்கத்தின் நிருவாக உறுப்பினர்கள் அரசாங்கத்தின் சுகாதார அதிகாரிகளினால் வழங்கப்பட்ட கொவிட்-19 வழிகாட்டல்களைப் பின்பற்றி கூட்டுத்தாபனத்தின் கட்டிடத்தொகுதியினுள் மௌன ஆர்ப்பாட்டம் ஒன்றினை மேற்கொள்ளத் தீர்மானித்தனர். ஆர்ப்பாட்டத் தினமன்று, பணிப்பாளர் சபையானது அந்த ஆர்ப்பாட்டம் குறித்து சிலோனிக்காவின் காவற்துறைக்கு அறிவித்தனர். ஆர்ப்பாட்டக்காரர்களை அமைதியாக கலைந்து செல்லும்படி காவற்துறையினர் வேண்டுகோள் விடுத்தனர். மறுநாள், சரத்தும் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற அவனது சக பணியாளர்களும் அவர்களது சேவைகளை முடிவுறுத்தும் கடிதங்களைப் பெற்றனர். ஆர்ப்பாட்டத்திலான

அவர்களின் பங்கெடுப்பும் அதன்மூலம் கூட்டுத்தாபனத்தின் ஏனைய தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பற்ற ஒரு தொழிற் சூழலை உருவாக்கியமையும் அவர்களின் சேவை முடிவுறுத்தலுக்கான காரணங்களாகக் காட்டப்பட்டன.

கூட்டுத்தாபனத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தனது நியதிச் சட்ட உரிமைகளை மீறுவதாய் அமைந்துள்ளன என சரத் நம்புகின்றான். அவன் தனக்கும் தனது சக பணியாளர்களுக்கும் கிடைக்கப்பெறக்கூடிய நிவாரணங்கள் தொடர்பில் உமது ஆலோசனையை நாடுகிறான். அவனுக்கு ஆலோசனை வழங்குக.

(25 புள்ளிகள்)

6. நொறீன் குடியரசின் சனாதிபதியான ரெஜினா மார்டீன் என்பவன் நொறீன் பாராளுமன்றம் ~~2020~~ 2019 ஒக்டோபர் 15ஆந் தேதியன்று கலைக்கப்படுமெனக் கூறும் பிரகடனமொன்றினை ~~2020~~ 2019 ஒக்டோபர் 14ஆந் தேதியன்று வெளியிட்டார். இப் பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வு ~~2018~~ 2017 மார்ச் 30ஆந் தேதியன்று நடைபெற்றது. பாராளுமன்றத்தின் கலைப்பு சட்டமுறையற்றது என்றும் அது நொறீன் அரசியலமைப்பு கொண்டுள்ள வெளிப்படையான தடையினை மீறுவதாக அமைந்துள்ளதாகவும் கூட்டு அரசாங்கத்தின் பிரதமரான மேகன் என்பவன் வாதிடுகிறார். அமைச்சரவை நியமனங்கள் மேற்கொள்ளப்படுகையில் தன்னுடன் கலந்தாலோசிக்கவில்லை எனவும் நிறைவேற்றுத்துறையானது எதேச்சாதிகாரமாகத் தீர்மானங்களை மேற்கொண்டு வருவதாகவும் மேகன் மேலும் குற்றஞ்சாட்டுகின்றார்.

எவ்வாறெனினும், பாராளுமன்றத்தில் உள்ள கட்சிகளில் எவையுமே அறுதிப் பெரும்பான்மை ஒன்றைக் கொண்டிராமையினால் பாராளுமன்றத்தினைக் கலைப்பதற்கு தனக்குப் போதுமானளவு காரணங்கள் இருந்ததாக ரெஜினா அபிப்பிராயங் கொண்டுள்ளார். பாராளுமன்றத்தில் மேகன் ஆதரவினை இழந்துவிட்டதாகவும் அவர் மேலும் வாதிடுகின்றார். பாராளுமன்றத்தினைக் கலைப்பதற்கான தனது தீர்மானம் ஓர் 'அரசியல் தீர்மானம்' எனக் கூறுவதன் மூலம் தனது நடவடிக்கைகளை ரெஜினா நியாயப்படுத்த முனைவதுடன் தான் வழக்கிலிருந்து விடுபாட்டுரிமை கொண்டுள்ளதாகவும் வாதிடுகின்றார். பாராளுமன்றத்தினைக் கலைப்பதற்கான சனாதிபதியின் தீர்மானத்தின் சட்டவாந்தன்மையினை சவாலுக்குட்படுத்தவும் ரெஜினா மீது நம்பிக்கையில்லா பிரேரணைக்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் மேகன் விரும்புகின்றார்.

நொறீன் குடியரசின் சட்டமுறைமையானது இலங்கையினதை ஒத்தது எனக் கருதிக் கொள்க. மேகனுக்கு ஆலோசனை வழங்குக. பொருத்தமான அரசியலமைப்பு ஏற்பாடுகள், தீர்ப்புச் சட்ட அதிகார ஆதாரங்கள் மற்றும் தேவைப்படின் அரசியலமைப்புக் கோட்பாடுகளைக் கொண்டும் உமது விடையினை ஆதாரப்படுத்துக.

(25 புள்ளிகள்)

7. செலா நாட்டின் பிரதம நீதியரசராக இருந்த திருவாளர் கிம் என்பவர் செலாஸ் சிற்றி யுனிவர்சிற்றியில் அரசியலமைப்புயர்வாதம் பற்றி ஓர் உரையினை வழங்குவதற்காக 2015ம் ஆண்டில் அழைக்கப்பட்டார். அந்நிகழ்வில், செலா நாட்டின் ஆட்சி முறையில் நிலவும் ஊழல் மற்றும் பொறுப்புக்கூறலிலான குறைபாடுகள் தொடர்பில் அவர் கண்டித்து விமர்சித்தார். செலா நாட்டின் சனாதிபதியான திரு.றென் மறுநாள் பிரதம நீதியரசரின் விமர்சனத்தின் மீது தனது அதிருப்தியை வெளியிட்டு இருப்பதாக தேசிய பத்திரிகை செய்தி வெளியிட்டது. 2016ம் ஆண்டின் ஆரம்பத்தில், சந்தேகநபர்களை பிடியாணை இன்றிக் கைது செய்யவும் மற்றும் அவர்களை விசாரணைக்கு உட்படுத்தாமல் மாதக் கணக்கில் அவர்களைச் சிறைப்படுத்தவும் முனைவதான பயங்கரவாதத்தினைத் தடை செய்யும் சட்டமூலமொன்றை செலா நாட்டின் பாராளுமன்றம் சமர்பித்தது. குறித்த சட்ட மூலத்தின் அரசியலமைப்பாந் தன்மையினை சமூக ஆர்வல அமைப்பொன்று சவாலுக்குட்படுத்திய போது, குறித்த சட்டமூலம் அரசியலமைப்பின் ஏற்பாடுகளை மீறுவதாகக் கூறிய பெரும்பான்மைத் தீர்ப்பொன்றினை திருவாளர் கிம் எழுதினார். அரசியலமைப்புப் பேரவையுடனான எந்தவொரு ஆலோசனையுமின்றி திரு.றென் அவர்களால் நேரடியாக நியமிக்கப்பட்டவர் என செலா நாட்டின் மக்களால் விமர்சிக்கப்பட்ட திரு.அவி அவர்களால் இதற்கான ஒருப்படாத் தீர்ப்பானது எழுதப்பட்டது. திருவாளர் கிம் அரசாங்கத்திற்கு எதிரான நிகழ்ச்சிநிரலில் வேலை செய்வதாக அரசாங்கம் 2017ஆம் ஆண்டில் குற்றஞ்சாட்டியதுடன் அவருடைய வேதனத்தையும் குறைத்து அவருக்கெதிராக நம்பிக்கையில்லா பிரேரணை நடபடி ஒன்றினையும் முன்னெடுத்தது. திருவாளர் கிம் அவர்களுடைய நடவடிக்கைகள் மீது விசாரணை செய்வதற்காக பாராளுமன்றத் தெரிவுக் குழு ஒன்று நியமிக்கப்பட்டது. தனது சார்பாக தோற்றுவதற்கு திருவாளர் கிம் அனுமதிக்கப்படாமல், பாராளுமன்ற தெரிவுக்குழுவானது 2018ஆம் ஆண்டில் அவரை குற்றங்கண்டு நீக்கியதுடன் திரு. அவியினை செலா நாட்டின் பிரதம நீதியரசராகவும் நியமித்தது.

செலா நாட்டின் நீதித்துறைச் சுதந்திரம் மற்றும் சட்டவாக்கத்தின் நீதிமுறை மீளாய்வு தொடர்பிலான ஆய்ந்தறிக்கை ஒன்றினை வரையும்படி உம்மை கேட்டுள்ள பல்கலைக்கழகம் ஒன்றிலுள்ள ஆய்வாளராக உம்மைக் கருதிக்கொள்க. செலா நாட்டின் அனைத்துச் சட்டங்களும் நிகழ்வுகளும் இலங்கையினதை ஒத்தவை எனக் கருதிக்கொண்டு கட்டுரையினை வரைக.

(25 புள்ளிகள்)

*******